SE – 072

**I Semester B.Com./B.B.A./B.H.M. Examination, January/February 2026**
**(SEP 2024-25)**
**TAMIL LANGUAGE (Part – I) (Paper – I)**

Time : 3 Hours Max. Marks : 80

Library, Acc. No. ........ Date ........ Chandapura, Anekal Tq.

SECTION – A

I. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக. **(3×8=24)**

1) குன்றூர் கிழார் மகனார் பாடிய பாடலின் பொருளை விளக்கி வரைக.

2) தலைவியின் அன்பு மிகுதியைக் குறித்து கபிலர் கூறுவனவற்றைத் தொகுத்து வரைக.

3) 'குறிப்பு அறிதல்' எனும் அதிகாரத்தின் கீழ் அமைந்த குறட்பாக்களின் கருத்துகளை விளக்கி வரைக.

4) நெட்டிமையார் பாடிய பாடாண்திணைப் பாடற் கருத்துகளைத் தொகுத்து வரைக.

5) செய்ந்நன்றி மறப்பது நன்றன்று என திருவள்ளுவர் கூறும் கருத்துகளை விளக்கி வரைக.

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக. **(4×5=20)**

1) ......... என்
உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்
துஞ்சு புலி இடறிய சிதடன் போல

2) நல் கவின் தொலையவும், நறுந் தோள் நெகிழவும்
புள் பிறர் அறியவும், புலம்பு வந்து அலைப்பவும்

3) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

4) உண்டால் அம்ம இவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது

5) கலங்கிக் கெடுதியும் விடீஇர் ஆயின் எம்மொடு
சொல்லலும் பழியோ மெல் இயலீர்

6) மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு

P.T.O.

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. (4×4=16)

1) மெய்யெழுத்துகளின் வகைகளைச் சான்றுடன் கூறுக.

2) சார்பெழுத்துகளின் வகைகளைக் குறிப்பிடுக.

3) மொழி முதல் எழுத்துகளைச் சான்றுடன் கூறுக.

4) சொல்லிசை அளபெடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

5) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் கூறுக.

6) வினா எழுத்தின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## SECTION – C

IV. ‘ஆத்தங்கரை ஓரம்’ எனும் நாவலில் இருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குத் திறனாய்வு வடிவில் விடை தருக. (2×10=20)

1) ராதாவின் பேச்சாற்றலை வெ. இறையன்பு வழி விளக்குக.

2) சுதீரின் பாத்திரப்படைப்பு.

3) கிராமங்கள் அழிவதற்கான காரணங்களை விளக்கி வரைக.

4) சிந்தூர் மக்களின் அவலநிலை.

---